**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **38/2021** |
| | | D/W's | : | **DW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. சுந்தரராஜ் | CASTE | : | |
| S/O | ராமராஜ் | RELIGION | : | இந்து |
| VILLAGE | எல். புதுார் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **58** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.11.2025**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி வழக்குச்சொத்தை பொது இடம் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கிரையம் வாங்கியுள்ள சொத்தின் முன்பாத்தியம் பற்றி எனக்குத்தெரியாது. நான் வாடிப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் உள்ள விவரங்கள் எனக்குத்தெரியும். என்னுடைய எதிருரையில் ரெங்கசாமி ரெட்டியார் வாலகுரவ ரெட்டியார் மற்றும் நாகு ரெட்டியாருக்கு பொதுவாக பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பொதுவாக பாத்தியப்பட்டதாக உள்ள வாசகம் என்னுடைய எதிருரையில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

2. நான் வழக்குச்சொத்தை சப்பாணி என்ற ராமச்சந்திரன் மற்றும் அவரது மகன் சேகர் ஆகிய இருவரிடம் கிரையம் வாங்கினேன். மேற்படி நபர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று ஆவணம் எதுவும் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி நபர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்குத்தெரியாது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரம் எனக்கு விரோதமாக உள்ளதால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. எனது கிரையப்பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் சப்பாணி என்ற ராமச்சந்திரன் வழக்குச்சொத்தில் ஓட்டல் நடத்தியதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் கிரையம் வாங்கியபின்பு சொத்தில் அரசு மதுபானக்கடை நடத்த வாடகைக்கு விட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றாலும் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நானும், சப்பாணி என்ற ராமச்சந்திரனும் வழக்குச்சொத்தில் கடை நடத்தவில்லை என்பதால்தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் வழக்குச்சொத்தை கிரையம் வாங்கும்போது மின்இணைப்பு பொதுவாக இருந்தது என்றாலும் நான் கிரையம் பெற்றபின் என்பெயரில் தனியாக மின்இணைப்பு பெற்றேன் என்றாலும் சரிதான். சப்பாணி என்ற ராமச்சந்திரனிடம் நான் கிரையம் வாங்கிய இடம்போக மீதம் உள்ள இடத்தை வாதி தரப்பினர் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. சப்பாணி என்ற ராமச்சந்திரனின் பூர்வீகம்பற்றி அவர்களுக்குள் எவ்வாறு பாகம் பிரித்தார்கள் என்றும் எனக்குத்தெரியாது என்றால் சரிதான். ரெங்கசாமி ரெட்டியார், வாலகுருரெட்டியார், நாகுரெட்டியார் வாரிசுகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. எனது நிருபண வாக்குமூலத்தில் வாதியின் மூதாதையரான முத்து ரெட்டியாரின் வாரிசுகளை தெரியாமல் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சப்பாணி என்ற ராமச்சந்திரன் வழக்குச்சொத்தை அனுபவம் செய்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அவர் அனுபவம் செய்தது பற்றி எனக்குத்தெரியும். பொதுஇடத்தை நான் கிரையம் வாங்கியவிட்டு, சப்பாணி என்ற ராமச்சந்திரன் அனுபவம் செய்த இடத்தை கிரையம் வாங்கியதாக பொய்யாக எதிர் வழக்குரை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1, 2, 3 ஆவணங்கள் வழக்குச்சொத்திற்கானது என்று எனது கிரையபத்திரத்தை தாக்கல்செய்தால்தான் தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்தானது சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு வாய்மொழி பாகப்பிரிவினையின்படி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின்மூலம் கிழமேல் 2.5 அடி, தென்வடல் 33 அடியில் உள்ள இடத்தைதான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் நான்குமால் விவரத்தில் சொத்தைச்சுற்றி சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு சொந்தமான வேறிடம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.5 பத்திரத்தின் சொத்து விவரத்தில் கிழக்குப்பக்கம் ரோடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு வா.சா.ஆ.5 பத்திரத்திலுள்ள இடத்தை தவிர வேறு இடம் இல்லை என்ற நிலையில் அவரிடமிருந்து பொதுச்சொத்தான வழக்குச்சொத்தை வா.சா.ஆ.6 பத்திரம் மூலம் தவறாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுரிமையில் உள்ள சொத்தை சப்பாணி என்ற ராமச்சந்திரன் விற்பனை செய்துள்ளதால் வா.சா.ஆ.6 பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

8. வழக்குச்சொத்தை வாதியும் அவர்கள் முன்னோர்களும் பொதுவாகதான் அனுபவம் செய்தார்கள் என்றாலும் அதை நான் தவறாக கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்குச்சொத்தை சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கும் எனக்கும் உரிமையில்லாததால் அதில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை நான் அகற்றி தரவேண்டும் என்றால் சரியல்ல.

9. வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது நான் அங்குதான் இருந்தேன். ஆணையர் அறிக்கையில் நான் அரசுப்பாதையை 20 சதுரடியை ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கைக்கு எதிராக நான் ஆட்சேபணை செய்யவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.